அய்யா துணை

# அகில உலக அய்யா பதிகள் கூட்டமைப்பு (IPAC)

## அய்யா வைகுண்டரின் 193-வது அவதார தின விழா

## போட்டித் தேர்வுகள்

எல்லாம் வல்ல வைகுண்ட பரம்பொருளினுடைய திருவருளால் பள்ளி கல்லூரி மாணவர்களிடையே படைப்பாற்றலை வளர்த்திடும் வகையிலும், ஆன்மீக தேடலை ஏற்படுத்தும் வகையிலும் **அகில உலக அய்யா பதிகள் கூட்டமைப்பு 193-வது அய்யா வைகுண்டரின் அவதார தின விழாவை** முன்னிட்டு ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளுக்கு இடையே ஆன்மீக படைப்புத்திறனை வளர்க்கும் நோக்கில் கட்டுரை போட்டி, பாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி மற்றும் உகப்படிப்பு உச்சிப்படிப்பு, வாழப்படிப்பு & அகிலத்திரட்டு அம்மானை ஒப்பித்தல் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்பட உள்ளது. அனைத்து மாணவ மாணவிகள் இப்போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகளை வெல்லலாம். ஒவ்வொரு பிரிவிலும் முதல் பரிசு, மற்றும் இரண்டாம் பரிசு பரிசு வழங்கப்படும். ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தில் வரும் வெற்றியாளருக்கு வருகிற பிப்ரவரி மாதம் 28ஆம் தேதி திருநெல்வேலி அழகு மஹாலில் நடைபெறும் 193 வது அவதார தின விழாவில் **மேதகு தமிழக ஆளுநர் திரு. R.N. ரவி** அவர்களால் பரிசும் வெற்றிச் சான்றிதழும் வழங்கப்படும். மேலும் பங்குபெறும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் பங்கேற்பு சான்றிதழ் வழங்கப்படும் மொத்தம் நான்கு பிரிவுகளாக இப்போட்டிகள் நடத்தப்பட உள்ளது.

07 வயது வரை

08 வயது முதல் 12 வயது வரை

13 வயது முதல் 18 வயது வரை

18 வயதுக்கு மேல்

### போட்டித் தேர்வுகள் நடைபெறும் இடம் மற்றும் நாள்

1. தூத்துக்குடி (அவதாரப் பதி) : (09-02-2025)
2. திருநெல்வேலி : (09-02-2025)
3. கோயம்புத்தூர் : (11-02-2025)
4. சென்னை : (12-02-2025)
5. கன்னியாகுமரி (தாமரைகுளம் பதி) : (16-02-2025)

**குறிப்பு :**

- வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்கள் வாழும் அன்பர்கள் போட்டி தேர்வில் கலந்து கொள்ள இணைய வழியாக கலந்து கொள்ளலாம் இருப்பினும் கீழ்க்கண்ட தொடர்பு எண்களில் தங்கள் விபரங்களை பதிவு செய்யவும்.
- நிர்வாக வசதிகளுக்காக போட்டி நடைபெறும் நாள் மற்றும் இடத்தை மாற்ற நேரிடலாம். இது சம்பந்தமாக சந்தேகங்களுக்கு நிர்வாக உறுப்பினர்களை அணுகலாம்

## தலைப்புகள்

- ஸ்ரீமன் நாராயணர் தாமே வைகுண்டமாய்த் தோன்றினார்
- ஸ்ரீமன் நாராயணரின் வைகுண்ட அவதார நோக்கம்
- புனித அகிலத்திரட்டு அம்மானையில் கூறப்பட்டுள்ள ஸ்ரீ ராம அவதாரம் மற்றும் ராமாயண நிகழ்வுகள்
- புனித அகிலத்திரட்டு அம்மானையில் கூறப்பட்டுள்ள ஸ்ரீ கிருஷ்ண அவதாரம் மற்றும் மகாபாரத நிகழ்வுகள்
- புனித அகிலத்திரட்டு அம்மானை காட்டும் எட்டு யுகங்கள் மற்றும் யுக கடவுளர்கள்
- ஐம்பதிகள் (சுவாமிதோப்பு பதி, தாமரைகுளம் பதி, முட்டபதி, அம்பல பதி, பூப்பதி) மற்றும் அவதாரப் பதி, வாகைப்பதி சிறப்புகள்
- தமிழ் வேதாகமம் புனித அகிலத்திரட்டு அம்மானை மற்றும் முழுமையான தமிழ் வழி வாழ்வியல் மற்றும் இறையியல் அய்யா வழிபாட்டு முறைகள்

### I. கட்டுரைப்போட்டி

08 வயது முதல் 12 வயது வரை

13 வயது முதல் 18 வயது வரை

18 வயதுக்கு மேல்

[மேலே கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்வுச் செய்து நான்கு பக்கங்களுக்கு மிகாமல் A4 தாளில் கட்டுரை எழுத வேண்டும்]

### II. பேச்சுப்போட்டி - தலைப்பு

07 வயது வரை

08 வயது முதல் 12 வயது வரை

13 வயது முதல் 18 வயது வரை

18 வயதுக்கு மேல்

[மேலே கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பைத் தேர்வுச் செய்து பத்து நிமிடங்களுக்கு மிகாமல் பேச வேண்டும்]

III. உகப்படிப்பு, உச்சிப்படிப்பு, வாழப்படிப்பு & அகிலத்திரட்டு அம்மானை ஒப்பித்தல் போட்டி

07 வயது வரை

08 வயது முதல் 12 வயது வரை

13 வயது முதல் 18 வயது வரை

18 வயதுக்கு மேல்

உகப்படிப்பு உச்சிப்படிப்பு, வாழப்படிப்பு, பிழை இல்லாமல் ஒப்பித்தல் வேண்டும். மேலும் அகிலத்திரட்டு அம்மானை காப்பு பகுதியில் தொடங்கி ஒப்பித்தல் வேண்டும். அதிக அளவில் ஒப்பிக்கும் முதல் இரண்டு போட்டியாளர்களை வெற்றியாளர்களாக தேர்வுச் செய்யப்படுவார்கள்.

IV. பாட்டுப் போட்டி

அய்யா வழி சார்ந்த பாடல்களை இராகத்துடன் சிறப்பாக பாட்டுப்பாடி வெற்றி பெறும் 15 வயதுக்கு உட்பட்ட சிறுவர் & சிறுமியர்களுக்கு முதல், இரண்டாம் பரிசுகள் வழங்கப்பட உள்ளது

*நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது*


**<u>தொடர்புக்கு</u>**

- Dr. **இரா. சௌந்தர ராஜ பாண்டியன்**, MBA., ME., PhD., (9840352565)
- Dr. **ஜெ. ஜெயசுதன்**, MA., MBA., MPhil.,PhD., (9486626663)
- **செல்வி. த. சீதா லெட்சுமி**, MBA., MSc., MLM., HDSE., (9489655691)
- M. **இராமநாதன்**,M.Com.,CAIIB (7358670975)
- G. **பச்சைமால்**,M.A (6385859900)
- T. **திருமாவளவன்**,B.Sc. Rtd.ADSP (9498176063)
- A. **அனந்தன் கணேஷ்** BE (9600071193)


என்றும் இறைப்பணியில்

**அகில உலக அய்யா பதிகள் கூட்டமைப்பு (IPAC)**